**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 26.07.2019–ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10ல் நகராட்சியின் குப்பை கிடங்கு உள்ளது. இந்த இடத்தில் குப்பைகள் அதிக அளவில் தேங்கி உள்ளன. ஆகவே இக்குப்பை கிடங்கில் சர்வே பணி மேற்கொண்டு (Total Station) குப்பைகளை அளவீடு செய்யும் பணி மேற்கொள்ள வேண்டும். இப்பணிக்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.30000 + GST @18% ஆகும். மேற்கண்ட பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி பெற மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1070/2019/இ1)**

**தீர்மான எண் :1004**
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

(ஒப்பம்) ஆ. தாணுமூர்த்தி,(பொ)
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,(பொ)
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 26.07.2019–ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் பொது நிதி 2019–20 ன் கீழ் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10ல் நகராட்சியின் குப்பை கிடங்கில் தேங்கியுள்ள குப்பைகளை சர்வே பணி மேற்கொள்ள வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. |
|---|---|---|
| 1. | தியான லிங்கா சர்வேயர்ஸ், கோயமுத்தூர் | 14160 |
| 2. | ரியல் லேண்ட் சர்வேயர்ஸ், கோயமுத்தூர் | 14500 |
| 3. | ஆர்.வி.எஸ் சொல்யூசன்ஸ், கோயமுத்தூர் | 18000 |

**அலுவலக குறிப்பு**

1. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கி தியான லிங்கா சர்வேயர்ஸ், கோயமுத்தூர் அவர்களின் விலைப்புள்ளியை தனிஅலுவலர் ஏற்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை ஏற்கலாம்.

(ந.க.எண்.1070/2019/இ1)

**தீர்மான எண் : 1005**
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

(ஒப்பம்) ஆ. தாணுமூர்த்தி,(பொ)
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,(பொ)
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 26.07.2019–ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட அம்மா உணவகத்திற்கு தேவையான பாத்திரங்கள் மற்றும் கிரைண்டர் புதியதாக வாங்குதல் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி பெற மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1) அனுமதிக்கலாம்.
2) வருவாய் நிதியின் கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளலாம்.
3) அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததை தனிஅலுவலர் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.530/2019/இ1)**

**தீர்மான எண் :**1006
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

(ஒப்பம்) ஆ. தாணுமூர்த்தி,(பொ)
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,(பொ)
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 26.07.2019–ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட பவானிசாகர் தலைமை நீரேற்று நிலையத்தில் இரண்டு நீர்த்தேக்கத் தொட்டியில் 4 ஆண்டுகளுக்கு முன் நீர் மூழ்கி மோட்டார் நிறுவப்பட்டது. இம்மோட்டார் கடந்த 4 ஆண்டுகளாக 24மணி நேரம் தொடர்ந்து ஓடிக்கொண்டிருந்து பழுதடைந்து விட்டது. இதன் பழுது பார்க்கும் செலவினம் அதிகபடியாக இருப்பதால், புதியதாக மோட்டார் வாங்கி நீர்தொட்டியில் பொருத்தினால் மட்டுமே குடிநீர் சீராக விநியோகம் செய்ய இயலும். எனவே, குடிநீர் அவசர அவசியத்தை முன்னிட்டு **தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 விதி–15ன் கீழ்** உள்ளூர் விலைப்புள்ளி பெற்று, பணி உத்தரவு வழங்கி, பணி முடித்து, தொகை வழங்கியதற்கு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

பதிவு செய்யலாம்.

**(ந.க.எண். /2019/இ1)**

**தீர்மான எண் :1007**
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

(ஒப்பம்) ஆ. தாணுமூர்த்தி,(பொ)
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,(பொ)
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 26.07.2019–ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்**

புன்செய்ப்புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான ஆட்டிறைச்சி கூடத்தை 2019–20ம் ஆண்டுக்குரிய தடையின்மைச் சான்றை புதுப்பிக்கவும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம், பெருந்துறை அவர்களுக்கான கட்டணம் செலுத்தவும் அதற்காக நடவடிக்கை மேற்கொள்ள ஆகும் செலவினம் ரூ.32,600/– தனி அலுவலரின் அனுமதி பெற, தனி அலுவலரின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

1. அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1263/2016/இ1)

**தீர்மான எண் :1008**
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

(ஒப்பம்) ஆ. தாணுமூர்த்தி,(பொ)
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,(பொ)
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 26.07.2019—ம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் திருப்பூர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரைகளின்படி, இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கட்டிடங்களில், மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு உள்ள கட்டிடங்களில், ஸ்டிக்கர் ஒட்டுவதற்கு, பொது நிதி 2019—20 ன் கீழ் 8000 பிரதி 4' X 9' ஸ்டிக்கர் அச்சடித்து கொடுக்கும் பணி மேற்கொள்ள வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விவரம் ரூ. | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | Zeeno Printers, Punjai Puliampatti | 8000 X 3.60 | 28800 |
| 2. | Sakthi Printers, Punjai Puliampatti | 8000 X 3.75 | 30000 |
| 3. | Sri Amman Offset & Xerox | 8000 X 3.70 | 29600 |

**அலுவலக குறிப்பு**

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய Zeeno Printers, Punjai Puliampatti அவர்களின் விலைப்புள்ளியை தனிஅலுவலர் ஏற்கலாம்.

**(ந.க.எண்.1014/2019/இ1)**

**தீர்மான எண் :1009**
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

(ஒப்பம்) ஆ. தாணுமூர்த்தி,(பொ)
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,(பொ)
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 26.07.2019–ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் திருப்பூர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரைகளின்படி, இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கட்டிடங்களில், மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு இல்லாத கட்டிடங்கள் மற்றும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு பழுது நிலையில் உள்ள கட்டிடங்களுக்கு அறிவிப்புகள் 7000 எண்ணிக்கைகள் கோவை மாவட்ட கூட்டுறவு அச்சகத்தில் அச்சிட்டு கொள்முதல் செய்து கொள்வதற்கும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.12,000/-க்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. 2019–20ம் ஆண்டிற்கு அலுவலகத்திற்கு தேவையான புத்தகங்கள், படிவங்கள், எழுது பொருட்கள், கணினி பயன்பாட்டிற்கு தேவையான உபகரணங்கள் கோவை மாவட்ட கூட்டுறவு அச்சிட்டு கொள்முதல் செய்ய தனிஅலுவலரின் நகர்மன்ற தீர்மான எண்.949 நாள்.28.02.2019ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.
   (ந.க.எண்.1014 /2019/இ1)

**தீர்மான எண் :1010**
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

(ஒப்பம்) ஆ. தாணுமூர்த்தி,(பொ)
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,(பொ)
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 26.07.2019–ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்**

இந்நகராட்சிக்கு திரு.பி.கதிரேசன் என்பவரால் வரியில்லா இனத்திற்காக, ,வழங்கப்பட்ட காசோலை வங்கியில் போதிய இருப்பு இல்லாத காரணத்தால் திருப்பப்பட்டது. எனவே திரு.பி.கதிரேசன் என்பவரால் நகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றத்தில் (CRL.OP.No.27293/2017ல்) வழக்கு தொடர்ந்துள்ளதால், நகராட்சி சார்பாக, நகராட்சியின் நிலை சட்ட வழக்கறிஞர் திரு. பி. ஆனந்த் அவர்கள் வழக்கு நடத்தி வருவதால், அதற்காக ஏற்படும் வழக்கு செலவினம் மற்றும் வழக்கு கட்டணம் ரூ. 15000/– தனி அலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
   (ந. க. எண். 293/2008/அ1)

**தீர்மான எண் :1011**
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

(ஒப்பம்) ஆ. தாணுமூர்த்தி,(பொ)
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,(பொ)
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 26.07.2019–ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டம், தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ், திடக்கழிவுகளானது மக்கும், மக்காத அபாயகரமான கழிவுகளாக பிரித்து வாங்கப்படுகிறது. மக்கும் கழிவானது நுண் உரக்குடில் மூலம் உரமாக்கப்படுகிறது. மக்காத கழிவானது மறு சுழற்சி செய்யப்படுகிறது. இதன் தொடர்ச்சியாக புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியினை குப்பையில்லா நகராட்சியாக (Garbage Free City) மத்திய அரசால் வழங்கப்படும் மூன்று நட்சத்திர அங்கீகாரம் (Three Star Rating) பெற மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் இவ்வறிவிப்பினை தினசரி செய்தி நாளிதழில் வெளியீடு செய்து பொதுமக்கள் ஆட்சேபனை பெறவும் இதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.1,00,000/- க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி பணி பொது சுகாதார முக்கியத்துவமான பணி என்பதால், மூன்று நட்சத்திர அங்கீகாரம் பெற மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் :1012**
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

(ஒப்பம்) ஆ. தாணுமூர்த்தி,(பொ)
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,(பொ)
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 26.07.2019–ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி பேரூராட்சியாக இருந்த போது மத்திய ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட கடன்கள் தொடர்பாக TNUIDRF நிதி மேலாளர், சென்னை அவர்களின் **16.03.2018**ம் தேதியிட்ட கடிதத்தின்படி **2017 -2018**ம் ஆண்டு கடன் நிலுவை ரூ.**1,32,88,386/-** குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி,

| | |
|---|---|
| IDSMT கடன் பெற்றது | - ரூ.**9119000/-** |
| கடன் செலுத்தியது | - ரூ.**6559271/-** |
| மீதம் செலுத்த வேண்டியது | - ரூ.**2559729/-** |

(Waiver) தள்ளுபடி செய்யக் கேட்டு இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம் **19.03.2018** அன்று நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதற்கு TUFIDCO நிறுவனத்துடன் ஒத்திசைவு செய்து அதன் விபரத்தினை தெரிவிக்குமாறும், அக்கடன் நிலுவைத்தொகை மாநில நிதிக்குழு (SFC) மானியத்திலிருந்து பிடித்தம் செய்ய உறுதி செய்யும் பொருட்டு, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் **9480/2018**/எல்ஏ**3**, **12.06.2018**ம் நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்புக் கோப்பின்படியும் அசல் கட்டின் படியும் அதன் பின்னர் நடவடிக்கைகள் ஏதுமில்லை. இந்நிலையில் TNUIDRF நிதி மேலாளர், சென்னை அவர்களின் கடிதத்தின்படி ரூ.**1,51,23,777/-** [ 2018 – 19 ஆண்டு] கடன் நிலுவை செலுத்தக் கோரப்பட்டுள்ளது. TNUIDRF நிதி மேலாளர், சென்னை அவர்களின் கடிதத்தின்படி **31.03.2019** முடிய கடன் நிலுவை தொகை செலுத்துதல் தொடர்பாக **22.05.2019**ம் தேதிய ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொள்ளப்பட்டு, அதன் விவரம் ஆணையாளர் அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டு, அதனை செலுத்த TUFIDCO நிறுவனத்தின் தெளிவுரை பெற்று நடவடிக்கை மேற்கொள்ள ஆணையாளர் அவர்களின் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி **3012,3013,3034,3035,3037,3040,3041,3090,3094,3014,3015,3016,3017,3039,3091,3092,3033, 3036,3038,3042,3048,3093,3095** மற்றும் **4046**எண்களின்படி பெறப்பட்ட கடன் தொகையை செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

இந்த நிலுவைத் தொகையை செலுத்துவதால் கடன் மற்றும் வட்டி செலுத்துவது மேலும் எழாது. ஏனவே மன்றம் இதனை அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் :**1013
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

(ஒப்பம்) ஆ. தாணுமூர்த்தி,(பொ)
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,(பொ)
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.